**கவனிக்க.**- *25.05.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1761 - 2012 ජූනි මස 01 වැනි සිකුරාදා - 2012.06.01**

*1761 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 922 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 927 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) பொருளாதார சேவை விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, யூன் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மே மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பதவிகள் — வெற்றிடம்

## பேருவளை நகர சபை

பேருவளை நகர சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள கீழ்க் காணும் பதவிகளை நிரப்புவதற்கு உரிய தகைமைகளையுடைய மேல் மாகாணத்தில் வதிவிடமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வித் தகைமைகளும் வேறு தகைமைகளும் |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக வேலையாளர் தரம் III | 01 | ரூபா 11,730 - 120 × 10- 130 × 10- 145 × 10 - 160 × 12 - ரூபா 17,600 (PL - 1-2006A) 4 ஆவதுவேதனப் படிமுறைக்கு முன் வினைத்திறன் காண் பரீட்சை | (அ) தரம் 08/ஆண்டு 09 சித்தியடைத் திருத்தல் |
| 2. | வீதித் தொழிலாளி தரம் III | 06 | ரூபா 11,730 - 120 × 10 - 130 × 10- 145 × 10 - 160 × 12 - ரூபா 17,600 (PL - 1-2006A) 4 ஆவதுவேதனப் படிமுறைக்கு முன் வினைத்திறன் காண் பரீட்சை | (அ) தரம் 05/ஆண்டு 06 சித்தியடைத் திருத்தல் |
| 3. | சுகாதார தொழிலாளர் தரம் III | 06 | ரூபா 11,730 - 120 × 10 - 130 × 10- 145 × 10 - 160 × 12 - ரூபா 17,600 (PL - 1-2006A) 4 ஆவதுவேதனப் படிமுறைக்கு முன் வினைத்திறன் காண் பரீட்சை | கல்வித் தகைமைகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. |

**சேவையில் இணைத்துக் கொள்வதற்கான பொது நிபந்தனைகள்:**

(i) விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி மேல் மாகாணத்தினுள் விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் தினத்திற்கு அண்மித்த 05 வருட கால நிரந்தர வசிப்பிடம் கொண்டவராய் இருத்தல் வேண்டும்;

(iii) பேருவளை நகர சபை அதிகார எல்லைக்குள் வசிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு அதிக கவனம் செலுத்தப்படும் :

(iv) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியன்று வயது 18 இற்குக் குறையாமலும் 45 இனை விஞ்சி விடாமலும் இருத்தல் வேண்டும். (உச்ச வயதெல்லை ஏற்கனவே அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர சேவையில் உள்ளவர்களுக்கு ஏற்புடையதாகாது.)

(v) சிறந்த குணநலன் கொண்டவராகவும் உடல் நலம் மிக்கவராகவும் இருத்தல் வேண்டும்;

(vi) குற்றத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதி மன்றத்தினால் குற்றவாளியாகப்பட்டவராக அல்லது அரச அல்லது மாகாண அரச சேவையில் இருந்து பதவி நீக்கப்பட்டவராக இருத்தல் ஆகாது;

(vii) சேவையின் தேவைக்கேற்ப முறையான நேர்முகப் பரீட்சையின் மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :-**

(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையது;

(ii) விதவைகள், தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்;

(iii) நியமனம் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுத்தப்படும்;

(iv) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் ஒழுங்குவிதிமுறைகளுக்கும் மேலதிகமாக இலங்கைச் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிமுறைகளுக்கும், அரச திணைக்கள பணிப்புரைகளுக்கும் மேல் மாகாண சபையின் அல்லது மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் அல்லது பேருவளை நகர சபையின் மூலம் அவ்வப் போது பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிமுறைகளுக்கும் மற்றும் பணிப்புரைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கும் முறை.-**

(i) விண்ணப்பதாரிகள் இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2012.06.25 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "செயலாளர், பேருவளை நகர சபை, பேருவளை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும் ;

(ii) விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் குறித்த பதவியை குறிப்பிட்டு " ....... பதவிக்கான விண்ணப்பப்படிவம்" என குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவத்துடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் ஒளிப்படப் பிரதியினை இணைத்து அனுப்பப்படல் வேண்டும்:-

(a) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(b) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(c) வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலரின் சான்றிதழ்;
(d) அண்மையில் பெறப்பட்ட குணநலன் பற்றிய சான்றிதழ் இரண்டு (2);
(e) தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ்.

இந்த விண்ணப்பம் கோரப்பட்டதன் பின்னர் அல்லது கோரப்படும் காலத்தினுள் இந்த ஆட்சேர்ப்பு விடயங்களை தாமதம் செய்வது அல்லது மாற்றியமைப்பது அல்லது இந்தஅறிவித்தலை செல்லுபடியற்றதாக்குவது அல்லது திருத்தியமைப்பது ஆகியவைகள் தொடர்பான பூரண அதிகாரம் என் வசமாகும்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் மாத்திரம் உரிய காலத்தில் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

தெரிவுகள் இலக்கம் 15/90 ஐ கொண்ட அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் இன விகிதாசாரத்தின் அடிப்படையில் செய்யப்படும்.

எச். எச். இந்ரா டி சில்வா,
செயலாளர்,
பேருவளை நகர சபை.

பேருவளை நகர சபை,
பேருவளை.
2012.05.14.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பேருவளை நகர சபை**

**............................. பதவி**

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :-----.

2. தபால் முகவரி :-----.

3. பிறந்த திகதி :-
ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

4. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி அன்று வயது :-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

5. ஆண்/பெண் :-----.

6. விவாகமானவர்/விவாகமாகாதவர் :-----.

7. இனம் :-----.

8. நீங்கள் இலங்கைப் பிரசையா? :-----.
அவ்வாறெனில் பரம்பரையாகவா? பதிவின் மூலமா? என்பது பற்றி :-----.

9. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளது)
   I. சித்தியடைந்துள்ள ஆண்டு /தரம் :-----.
   II. க. பொ. த. (சா.த) பரீட்சை ............ சுட்டெண் :-----.
   III. பரீட்சை ஆண்டும் மாதமும் :-----.
   சித்தியடைந்துள்ள பாடங்கள்

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

10. நீங்கள் தற்பொழுது இந்த நகர சபையில் சேவை புரிபவர் என்றால், அது பற்றிய விபரம் மற்றும் நியமனத்தின் தன்மை :-----.

11. சேவை அனுபவம் மற்றும் தொழில் ரீதியான தகைமைகள் :-----.

இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் இத்தால் உறுதி மொழிகிறேன். இங்கு கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையற்றவை அல்லது பிழையானவை என இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் அறியப்பட்டால் நான் இப்பதவிக்கு தகுதியற்றவராவேன் எனவும் நியமனம் பெற்ற பின் விடயம் நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையிலிருந்து முடிவுறுத்தப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**விண்ணப்பதாரர் அரசாங்க சேவையிலுள்ளவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரரான திரு./திருமதி/செல்வி ................. என்பவர் இந்த திணைக்களத்தில்/நிறுவனத்தில் ..................... பதவியில் சேவை புரிகின்றார். அவர் எவ்வித ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) உட்படுத்தப்படாதவர் என உறுதிப்படுத்தப்படுவதுடன், விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கிறேன்.

...................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
திணைக்களம்/நிறுவனம் (பதவி முத்திரை இடவும்) :-----.
திகதி :-----.

6-51

---

**மீரிகம பிரதேச சபை**

மேல் மாகாண அரசாங்க சேவையிலுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

மேல் மாகாண அரசாங்க சேவையில், மீரிகமகப் பிரதேச சபையில் தற்பொழுது பின்வரும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு குறிப்பிட்ட தகைமைகளையுடைய மேல் மாகாணத்தினுள் நிரந்தரமாக வதியும் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பூரணப்படுத்தி கல்வித் தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் "செயலாளர், மீரிகம பிரதேச சபை", மீரிகம என்ற முகவரிக்கு 2012.06.25 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை தாங்கிவரும் கீழ் உறையின் இடது பக்க மேல் மூலையில் "..............." பதவிக்கான விண்ணப்பம் எனக் குறித்து அனுப்பி வைத்தல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத மற்றும் குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் வீண்ணப்பங்கள் எற்றுக் கொள்ளப்படமாட்டா.

ஏற்கனவே அரசாங்கம்/மாகாண அரசாங்க நிறுவனங்களிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவரினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

| தொ இல. | பதவிப் பெயர் | எண் ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1. | வீதித் தொழிலாளர் (அலுவலகப் பணியாள் (சேவையில் III) | 01 | ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600 (PL 1-2006-A) நான்காவது சம்பளப் படைமுறைக்கு வரும் முன்னர் வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். | தரம் 5/6 சித்தியடைந்திருத்தல் வேண்டும் |
| 2 | சுகாதாரத்துறைத் தொழிலாளர் (அலுவலகப் பணியாள் (சேவையில் III) | 04 | ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600 (PL 1-2006-A) நான்காவது சம்பளப் படைமுறைக்கு வரும் முன்னர் வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். | கல்வி தகைமைகள் கருத்திற் கொள்ளப்படமாட்டா. |
| 3 | அலுவலகப் பணியாள் (அலுவலகப் பணியாள் (சேவையில் III) | 01 | ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160- ரூபா 17,600 (PL 1-2006-A) 12- நான்காவது சம்பளப் படைமுறைக்கு வரும் முன்னர் வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். | தரம் 8/9 சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 4 | சாரதி | 02 | ரூ. 12,470-10×130-10×145-10×160-12×170-18,860 (PL 1-2006-A) நான்காவது சம்பளப் படைமுறைக்கு வரும் முன்னர் வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். | குறிப்பு இலக்கம் 01 ஐப் பார்க்குக. |

**குறிப்பு இல. 01.**

1. ***சாரதி பதவிக்காக பூர்த்தி செய்திருக்க வேண்டிய கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :***
   I. ஆகக் குறைந்த தரம் 8-9 சித்தியடைந்திருத்தல் வேண்டும்;
   II. தனியார்/வாடகை வாகனம் மற்றும் நிகர எடை 24 டொன்னுக்குக் குறைந்த ஸ்டேஷன் லெகன் வாகனம் ஓட்டுவது தொடர்பில் மோட்டார் போக்குவரத்துஆணையாளரினால் விநியோகிக்கப்படும் திறன் பற்றிய சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.;
   III. வாகன ஓட்டுநராக 03 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் ;
   (சான்றிதழின் மூலம் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்).
   IV. ஆகக் குறைந்தது 05 அடி உயரம் இருத்தல் வேண்டும்;
   V. பகல் மற்றும் இரவு நேரங்களில் பணியில் ஈடுபடும் வகையில் உடலியல் தகுதியுடையவராக இருத்தல் வேண்டுமென்பதுடன்சிறந்த கண்பார்வை இருத்தலும் வேண்டும்;
   VI. வீதி சமிக்ஞை பற்றிய சிறந்த அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்; நடாத்தப்படுகின்ற செயல்முறைப் பரீட்சையிலும் வீதி ஒழுங்கு விதிகள் பற்றிய பரீட்சையிலும் ஆகக் குறைந்தது 40% வீதமான புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

***அட்டவணை இலக்கம் 01***

1. **சேவை நிபந்தனைகளும் நியதிகளும்:**

(அ) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதும் ஆகும்.

(ஆ) விதவைகள், அநாதைகள்/தபுதாரர்கள்/ஓய்வூதிய சம்பள நிதிக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(இ) தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் மூன்று வருட கால நன்னடத்தைக்கு உட்படுத்தப்படுவார்கள். அந்த நன்னடத்தை காலத்தில் வேலை வரவு மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானதாக இருந்தால் நன்னடத்தை கால முடிவில் பதவியில் நிரந்தரமாக்கப்படுவார்கள் ஏற்கனவே அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையிலுள்ள பதவி நிரந்தரமாக்கப்பட்டோர்கள் ஒரு வருட பதில் கடமை காலத்திற்கு அமைய ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**2. ஏனைய பொதுநிபந்தனைகள்.:**

(அ) விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ; (ஏற்கனவே அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.)

(ஆ) விண்ணப்பதாரர்கள் பரம்பரையாக அல்லது வம்சாவழியாக இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(இ) நல்லொழுக்கமும் உடலாரோக்கியமுடையவர்களாக இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டால் ஒரு மாத காலத்திற்குள் அரசாங்க மருத்துவர் ஒருவரினால் நடாத்தப்படுகின்ற மருத்துவப் பரிசோதனைக்குத் தோற்ற வேண்டும். அந்தப் பரீட்சையில் உடலியல் ரீதியில் தகைமையற்றவர் எனக் காணப்பட்டால் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

(ஈ) குற்றவியல் தண்டனைக் கோவையின் பிரகாரம் ஒரு நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கணிக்கப்பட்டவராக இருத்தல் ஆகாது.

(உ) விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு முன்னர் மூன்று வருட காலம் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசித்திருத்தல் வேண்டும்.

(ஊ) அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலிருந்து விலக்களிக்கப்பட்டவராக இருத்தல் ஆகாது என்பதுடன் 44/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வு பெற்றவராகவும் இருத்தல் ஆகாது.

**ஆட்சேர்ப்பு முறை:**

(அ) இந்தப் பதவி தொடர்பில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் தகுதி பெறும் விண்ணப்பதாரர்கள் 24/95 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு அமைய ஒரு நேர்முகப்பரீட்சைக்குத் அழைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

ஆர். பீ. சிரிமான்ன,
செயலாளர்,
மீரிகமை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மீரிகம.
2012.05.17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மீரிகம பிரதேச சபை**

**மேல் மாகாண அரசாங்க சேவையில் ................. பதவி**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :-----.

2. நிரந்தர முகவரி :-----.

3. நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

5. பிறந்த திகதி :-
ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

6. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு வயது :-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

7. பால்/நிலை :-----.
விவாகமானவரா?/விவாகமாகாதவரா? :-----.

8. இலங்கைப் பிரசையாக இருப்பது பரம்பரையினாலா? அல்லது பதிவு மூலமா என்பது பற்றிய விபரம் :-----.

9. கல்வித் தகைமைகள் :- (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கப்படுதல் வேண்டும்)
கல்வி கற்ற பாடசாலை:
சித்தியடைந்த உயர் பரீட்சை :-----.

10. I. ஏனைய தகைமைகள் :-----.
II. தொழிற்றகைமைகள் :-----.
III. அனுபவம் :-----.

. அந்த நியமனமத்தின் தன்மை இந்த பிரதேச சபையின் கீழ் பணியாற்றுபவராயின் சேவைக்காலமும் விபரமும் :-----.
(நிரந்தர/அமைய/தற்காலிக) :-----.

11. நீங்கள் எப்பொழுதாவது நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கணிக்கப்பட்டுள்ளீர்களா? :-----.

இதில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள சகல விபரங்களும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதியுரைக்கின்றேன். இதில் என்னால் தரப்பட்டுள்ள விடயங்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் தெரிய வந்தால் நான் இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்றும், நியமனம் கிடைத்த பின்னர் தெரிய வந்தால் எதுவித நஷ்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்றும் நன்கறிவேன்.

..................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரராகிய திரு./திருமதி/செல்வி ....................... என்பவர் இந்த நிறுவனத்தில் .................... கடமையாற்றுகின்றார் என்றும், இவர் எந்த வித ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் உட்படவில்லை என்றும் சான்றுப்படுத்துவதோடு, விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

..................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

கையொப்பம் :-----.
பெயர் :-----.
பதவி :-----.
திகதி :-----.

6-161

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கட்டுநாயக்க-சீதுவை நகர சபை**

நகர சபை அதிகார பிரதேசத்திற்குள் வாகனங்கள் நிறுத்திவைப்பதற்கான இடங்களை ஏற்பாடு செய்து அவ்வாகனங்களுக்கு கட்டணங்கள் அறவிடுதல் பற்றிய துணைவிதிகள்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (குறைநிரப்பு துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களினால் வழங்கப்பட்டு 2011, செத்தெம்பர் 29 ஆந் திகதிய 1725/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட துணை விதிகள் கட்டுநாயக்கா-சீதுவை நகர சபைக்கு ஏற்றுக்கொண்டு அமுல்படுத்த தகுந்ததென 2012, பெப்புருவரி 28 ஆந் திகதியன்று நடைபெற்ற நகர சபை மாதாந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறியத் தருகிறேன்.

லலந்த குணசேகர,
தலைவர்,
கட்டுநாயக்க-சீதுவை நகர சபை.

கட்டுநாயக்க-சீதுவை நகர சபை,
சீதுவை,
2011.12.23.

6-52

## காலி மாநகர சபை

இறைச்சிக்கடை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல் – 2012

ஊன் வினைஞர் கட்டளை சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) (7)2 ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்க்காணும் அட்டவணையில் பெயர் குறிப்பிட்டவரிடம் இருந்து 2012 ஆம் வருடத்திற்கு இறைச்சி விற்பனை செய்வதற்கு உத்தரவுப்பத்திரம் கோரி விண்ணப்பம் கிடைக்கப்பெற்றுள்ளது.

குறிப்பிடப்பட்ட மா நகர சபையின் இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக்கப்படும் அனுமதி வழங்கப்படுவதை ஆட்சேபிக்க விரும்பின் ஆட்சேபனைக்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் இணைப் பிரதிகள் இரண்டுடன் எனக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இக்காலகட்டத்திற்குள் இவ்வறிவித்தல் சம்பந்தமாக யாரும் ஆட்சேபிக்கவில்லையாயின் கீழ்க்காணும் அட்டவணையின் பிரகாரம் விண்ணப்பதாரர்களுக்கு இறைச்சிக்கடை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என்பதை பொது மக்கள் அறிந்து கொள்வதற்காக இவ்வாறு அறிவிக்கின்றேன்.

### அட்டவணை

| | விண்ணப்பதாரியின் பெயர், முகவரி | வியாபாரம் செய்யும் இடம் | வியாபாரத்திற்கான இறைச்சியின் தன்மை |
|---|---|---|---|
| 1. | மொஹமட் அதிக் சய்பிரில்லாஹ் இல. 41/48, பெலவத்த, ரிச்மன்ட் கந்த வீதி, காலி. | கோன்கஹசந்தி இறைச்சிக்கடை | மாட்டிறைச்சி |
| 2. | மொஹமட் நசீர் ஷாகுல் ஹமீட், இல. 28/9சீ, பண்டாரநாயக்க மாவத்தை, காலி | ஓரொப்புவத்தை, மத்திய வியாபாரச் சந்தை, இல. 37 | ஆட்டிறைச்சி |
| 3. | நூருல் மின்னா மசூர், இல. 546, மாத்தறை வீதி, கடுகொடை, காலி. | தெவட்டை | மாட்டிறைச்சி |

மெத்சிறி த சில்வா,
மாநகர முதல்வர்,
காலி மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
காலி.
2012.05.16.

6-179/1

---

## காலி மாநகர சபை

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டம்

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) 17(1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் காலி மா நகர சபையின் நகர முதல்வராக பதவி வகிக்கும் மெத்சிரி த சில்வா என்ற நான் 2012 ஆம் ஆண்டிற்குள் காலி மா நகர எல்லைகளுக்குள் கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலும் அரசினால் பிரகடனப்படுத்தப்படும். தினங்களிலும் என்னால் இடைக்கிடை அறிவிக்கப்படும் தினங்களிலும் இறைச்சிக்காக மிருகங்களைக் கொல்வதையும் விற்பனை செய்வதையும் இத்தால் தடை செய்து கட்டளை பிறப்பிக்கின்றேன்.

மெத்சிறி த சில்வா,
மாநகர முதல்வர்,
காலி மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
காலி.
16.05.2012.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| *2012.01.08* | - | துருது முழுநோன்மதி தினம் |
| *2012.01.15* | - | தமிழ் தைப்பொங்கல் தினம் |
| *2012.02.04* | - | தேசிய தினம் |
| *2012.02.07* | - | நவம் முழுநோன்மதி தினம் |
| *2012.02.20* | - | மகா சிவராத்திரி தினம் |
| *2012.03.07* | - | மெதின் முழுநோன்மதி தினம் |
| *2012.04.06* | - | பக் முழுநோன்மதி தினம் |
| *2012.04.12* | - | சிங்கள, தமிழ் புத்தாண்டு தினத்திற்கு முந்திய தினம் |
| *2012.04.13* | - | சிங்கள, தமிழ் புத்தாண்டு தினம் |
| *2012.05.01* | - | மே தினம் |
| *2012.05.05* | - | வெசாக் முழுநோன்மதி தினம் |
| *2012.05.06* | - | வெசாக் முழுநோன்மதி தினத்திற்கு அடுத்த தினம் |
| *2012.06.04* | - | பொசொன் முழுநோன்மதி தினம் |
| *2012.07.03* | - | எசல முழுநோன்மதி தினம் |
| *2012.08.01* | - | நிக்கினி முழுநோன்மதி தினம் |
| *2012.09.29* | - | பினர முழுநோன்மதி தினம் |
| *2012.10.24* | - | உலக மிருகங்கள் தினம் |
| *2012.10.29* | - | வப் முழுநோன்மதி தினம் |
| *2012.11.13* | - | தீபாவளிப் பண்டிகைத் தினம் |
| *2012.11.27* | - | இல் முழுநோன்மதி தினம் |
| *2012.12.27* | - | உந்துவப் முழுநோன்மதி தினம் |

*6-179/2*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

*அட்டவணை - 2012*

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 01.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.05.2012 |
| | | வெள்ளி | 08.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.05.2012 |
| | | வெள்ளி | 15.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.06.2012 |
| | | வெள்ளி | 22.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.06.2012 |
| | | வெள்ளி | 29.06.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.06.2012 |
| **யூலை** | .. | வெள்ளி | 06.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.06.2012 |
| | | வெள்ளி | 13.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.06.2012 |
| | | வெள்ளி | 20.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.07.2012 |
| | | வெள்ளி | 27.07.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.07.2012 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 03.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.07.2012 |
| | | வெள்ளி | 10.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.07.2012 |
| | | வெள்ளி | 17.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.08.2012 |
| | | வெள்ளி | 24.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.08.2012 |
| | | வியாழன் | 30.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.08.2012 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.